# பத்திரிக்கை செய்தி

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம் மணிகண்டம் ஒன்றியத்தில் கள்ளிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த காய்கறிகள், பழங்கள் மற்றும் மலர்களுக்கான வணிக வளாகத்தினை 29.02.2020 இன்று வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு,இ.ஆ.ப., மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சியர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்களும் கள்ளிக்குடி செயல்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பாக ஆய்வு செய்தார்கள்.

கள்ளிக்குடி மார்க்கெட் ஆய்வின் போது, அங்கு நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு வசதிகளையும் நேரடியாக தனித்தனியே ஆய்வு செய்து அதனை முழு பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். கள்ளிக்குடி வணிக வளாகத்தினை செயல்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பாக புதிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இவ்வரசாணையின்படி, கள்ளிக்குடி வணிக வளாகத்தினை விரைவில் முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு ஒருங்கிணைந்த வணிக வளாகத்தில் உள்ள 830 கடைகளில் முதற்கட்டமாக 207 கடைகள், குளிர்பதன கிடங்கு, தரம் பிரித்தல் கூடம் ஆகியவற்றை திருச்சிராப்பள்ளியில் இயங்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும், தகுதியுள்ள உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கும் முன்னுரிமையின் அடிப்படையில் 10 நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்கள்.

மேலும், மீதமுள்ள 623 கடைகளுக்கும் தமிழ்நாட்டில் பதிவுபெற்ற காய்கள், பழங்கள் மற்றும் மலர்களுக்கான வணிகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்படும். அவரவர் தேவைக்கேற்ப கடைகள் சிறு மாறுதல்கள் செய்யப்பட்டு வழங்கப்படும். மேலும், பொது வசதிகளான வங்கி, உணவகம் போன்றவற்றிற்கு தனித்தனியே ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்படும் என தெரிவித்தார்கள்.

கள்ளிக்குடி ஆய்வின்போது, வேளாண் கூடுதல் இயக்குநர் திரு.கே.சேகர், வேளாண் இணை இயக்குநர் திருமதி.திலகவதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திருமதி.சாந்தி, வேளாண் துணை இயக்குநர் திரு.முருகன், திருச்சி விற்பனைக்குழு செயலாளர் திரு.சுகுமார் மற்றும் கள்ளிக்குடி ஒருங்கிணைந்த செயல் அலுவலர்கள் மற்றும் உழவர் உற்பத்தி ஆர்வலர் குழுக்கள் கலந்துக் கொண்டனர்.